முடியாது. எந்தக் கட்சியாக இருந்தாலும், அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி தொழில் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் இந்த தினத்தைக் கொண்டாடுவார்கள். எந்த ஸ்தாபனமாக இருந்தாலும் முதலாளிகளிடம் வேலை செய்யும் எந்தத் தொழிலாளரும் இந்த தினத்தைக்கொண்டாடுவார்கள். இதில் அபிப்பிராய பேதம் இருக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. காங்கிரஸ் கட்சி தொழிலாளர்களும் இப்படிப்பட்ட ஒரு நாள் விடுமுறை தினமாக இருக்க வேண்டும் என்று போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். இதில் அரசியல் வேற்றுமை கிடையாது. ஆகவே இந்த மசோதாவை சர்க்கார் எதிர்த்தாலும் கூட அங்கத்தினர்கள் எல்லோரும் இதை ஏக மனதாக ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். சர்க்கார் கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் அவர்களுக்கு தொழிலாளர்கள் மீது அனுதாபம் இருக்கிறது. ஆகவே அவர்கள் உள்பட எல்லா அங்கத்தினர்களும் இதை ஏகமனதாக ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இதை வற்புறுத்துகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" I have nothing more to add to what I have already stated. The hon. Member Sri Ramalingam did not answer the question of declaring 15th of August or 26th of January or 30th of January as a holiday for labour also. Any of those days could be declared as a holiday but he did not refer to it. No convincing reason has been given by Sri Ramalingam to change my mind in this matter."

SRI S. RAMALINGAM :—" ஆகஸ்ட் 15-ம் தேதியைக்கொண்டாடுவதிலோ, அல்லது ஜனவரி 26-ம் தேதியைக் கொண்டாடுவதிலோ, அல்லது மகாத்மா காந்தி உயிர் துரந்த நாளாகிய ஜனவரி 30-ம் தேதியைக் கொண்டாடுவதிலோ கம்யூனிஸ்ட் கட்சிக்கு எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது. தொழில் சங்கத்திற்கும் தொழிலாளர்களுக்கும் எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

MR. SPEAKER :—" The question is—

'That the Declaration of May Day Holiday Bill, 1954 (L.A. Bill No. 11 of 1954), be taken into consideration at once'."

The motion was put and lost.

(2) THE MADRAS SHOPS AND ESTABLISHMENTS (AMENDMENT) BILL, 1954 (L.A. BILL NO. 15 OF 1954)

SRI M. KALYANASUNDARAM :—" Mr. Speaker, Sir, I move—

> '*That the Madras Shops and Establishments (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 15 of 1954), be taken into consideration at once.*' "

SRI K. T. RAJU :—" Sir, I second it."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Madras Shops and Establishments (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 15 of 1954), be taken into consideration at once.' "

* SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நான் பிரேரேபிக்கும் நோக்கமானது ஏதாகிலும் ஒரு புது மாறுதலை ஏற்படுத்துவதற்காக அல்ல.

17th February 1955] [Sri M. Kalyanasundaram]

1947-ம் வருஷம் கடை சிப்பந்திகளுடைய சட்டம் நிறைவேற்றப்பட்டு அதுவும் இப்பொழுது அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அந்தச் சட்டத்தின் படி கொடுக்கப்பட்ட உரிமைகளை மாற்றவேண்டுமென்று இந்த திருத்தச் சட்டத்தை நான் கொண்டுவரவில்லை. அடிப்படைக் கொள்கையையே மாற்றவேண்டும் என்று நான் இந்த மசோதாவைக் கொண்டுவரவில்லை. அப்படிப்பட்ட திருத்த மசோதா இது இல்லை என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1947-ம் வருஷச் சட்டத்தில் முக்கிய மாக கொடுக்கப்பட்ட உரிமைகள் என்னவென்றால் இதுவரை விடுமுறை என்று அறியாத கடை சிப்பந்திகளுக்கு வாரம் ஒரு நாள் சம்பளத்துடன் விடுமுறையும், வருஷத்தில் சில முக்கிய தினங்களில் அவர்களுக்கு விடு முறை அளிக்கவேண்டும் என்றும், அவர்கள் நோய்வாய்ப்பட்டால் அதற்கு 12 நாட்கள் விடுமுறை அளிக்கவேண்டும் என்றும், வேலையிலிருந்து திடீரென்று நீக்கப்பட்டால்—அப்படி நீக்கக்கூடாது—அவர்கள் சர்க்காரிடத் தில் தாவாசெய்து அதற்கு பரிகாரம் தேடிக்கொள்ளக்கூடிய ஒரு உரிமை யையும் அந்த சட்டம் 41–ஆவது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எட்டு மணி நேரம்தான் அவர்கள் வேலைசெய்ய வேண்டும் என்றும், அப்படி அவர்கள் எட்டு மணி நேரத்திற்குமேல் வேலை செய்தால் அப்படிச்செய்யும் காலத்தில் அவர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கவேண்டும் என் றும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாக எல்லா தொழி லாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள்.

“ஓவர்டைம் ஓர்க்குக்காக கூடுதல் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சட்டத்தில் ஒரு பிரிவு இருந்தபோதிலும் அது நடைமுறையில் எவ்வளவு தூரம் அமுலாகியிருக்கிறது. சாதாரணமாக பாங்குகளிலு கம்பெனிகளி லும் தொழிலாளிகள் $6\frac{1}{2}$ மணி நேரம்தான் வேலை செய்துக்கொண்டு வரு கிறார்கள். அவர்கள் $6\frac{1}{2}$ மணி நேரத்திற்குமேல் வேலைசெய்தால் ஓவர்டைம் கொடுப்பது கிடையாது. ஏனென்றால் இந்த சட்டப்பிரகாரம் 8 மணி நேரத்திற்குமேல் வேலை செய்தால்தான் ஓவர்டைம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆதலால் அவர்கள் இந்த ஓவர்டைம் விஷயமாக பாதிக்கப்படுகிறார்கள். இந்தச் சட்டத்தினால் அவர்களுக்கு பிர யோசனமில்லாமல் போகிறது. ஏற்கெனவே 6 அல்லது $6\frac{1}{2}$ மணி நேரம் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்களை இப்போது 8 மணி நேரம் முதலாளிகள் வேலை வாங்குகிறார்கள். அவ்வாறு அதிகநேரம் வேலை வாங்குவதற்கு தகுந்தாற்போல் ஓவர்டைம் படி வேண்டுமென்று தொழிலாளி கள் கேட்டால் அதைக்கொடுப்பதற்கு முதலாளிகள் மறுக்கிறார்கள். அதன் பேரில் தொழிலாளர்கள் லேபர் கமிஷனருக்கு முறையிட்டால், சட்டத்தில் 8 மணி நேரத்துக்குமேல் வேலை செய்தால்தான் ஓவர்டைம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆதலால் ‘நான் இந்த விஷயத்தில் தலை யிடுவதற்கு ஒன்றுமில்லை’ என்று அவர் சொல்லிவிடுகிறார். என்னுடைய திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால் ஏற்கெனவே 6 அல்லது $6\frac{1}{2}$ மணி நேரம் வேலை செய்துக்கொண்டிருந்த தொழிலாளிகளிடமிருந்து இவ்வாறு அதிக நேரம் வேலை வாங்கினால் அவர்களுக்கு ஓவர்டைம் படி கொடுக்கவேண்டும் என்பதுதான். ஏற்கெனவே சட்டத்தில் இருப்பதை என்னுடைய திருத்தம் கொஞ்சம் விரிவுபடுத்துகிறது. 1 p.m.

“நான் செக்ஷன் 41-க்கும் ஒரு திருத்தம் கொண்டுவந்து இருக்கிறேன் சாதாரணமாக ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அந்தத் தொழிலாளியை மறுபடியும் வேலையில் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்று உத்தரவு போடுவதற்கு லேபர் கமிஷனருக்கு இந்தச் சட்டத்தில் அதிகாரம் இல்லை. ஆனால் லேபர் கமிஷனருக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டது என்றால் அவ்வாறு வேலையிலிருந்து நீக்கப்பட்டது நியா யமா அல்லது நியாயமுல்லையா என்பதைப்பற்றி விசாரிப்பதுதான். அவ் வாறு நீக்கப்பட்டது நியாயம் இல்லை அந்தத் தொழிலாளியை மறுபடியும் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போடுவதற்கு அவருக்கு அதிகாரமில்லை. அதற்காகத்தான் செக்ஷன் 41-க்கு ஒரு திருத் தம் கொடுத்திருக்கிறேன். இன்னும் இந்தச் சட்டத்தில் முக்கியமான அம்சம் விதிவிலக்குப்பற்றியது. செக்ஷன் 6-வது பிரிவின் பிரகாரம்

இந்தச் சட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரிகளுக்கு சகல அதிகாரமும் கொடுத்திருக்கிறது. அவர்கள் சர்வாதிகாரிகளாக மாறிவிடுவார்களோ என்று ஒரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் சில நாட்களுக்கு முன்புதான் இந்த விஷயம் விவாதத்திற்கு வந்தபோது மூன்று தொழிலாளிகளுக்குட்பட்டவர்களைக்கொண்டு நடத்தும் தொழில்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதாகச் சொன்னார். இவ்வாறு விதிவிலக்கு அளிக்கும் அதிகாரத்தை பூராவும் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரிக்கே கொடுத்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். அவ்வாறு விதிவிலக்கு கொடுத்தால் அது சில நிபந்தனைகளின் பேரில்தான் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டாலும் குறிப்பிட்ட காலத்திற்குத்தான் கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய திருத்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"1947-ம் வருஷத்திய ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விலக்கு அளிப்பது என்பதுபற்றி விவாதம் நடந்தபோது பல விஷயங்களை இந்தச் சபையில் ஆராய்ந்திருக்கிறார்கள். மூன்றும், அதற்குக் கீழ்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் கடைகளில் 8 மணிநேரம் வேலை செய்தல், வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அவர்களுக்கு நஷ்டயீடு கொடுத்தல் போன்ற விஷயங்களைப்பற்றி ஆலோசித்தோம். தொழிளாலர்களுக்கு முன்பு இருக்கக்கூடிய உரிமைகள் ஒன்றுக்கும் குந்தகம் ஏற்படாமல் இருப்பதற்குவேண்டி இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறது. சிறு வியாபாரிகளைப் பாதிக்கக்கூடாது என்று மந்திரி அவர்கள் குறிப்பிட்டார். வியாபாரிகளுக்கு தொந்திரவு கொடுக்கவேண்டுமென்பது எங்களுடைய நோக்கம் அல்ல. நான் கொடுத்துள்ள திருத்தங்கள் மூன்றும், மிகவும் முக்கியம். ஆதலால் அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மந்திரி அவர்கள் சொல்லிய வாக்குறுதி தெளிவாக இல்லை. பத்திரிகைகளில் பார்த்தபோது அந்த செய்தியும் சரியா இல்லை என்பதுதான் தெரியவில்லை."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அன்று சொன்னதில் சற்றும் முரண்பாடில்லை என்று சொல்லுகிறேன்."

SRI M. KALYANASUNDARAM :—" மேலும் நான் கொடுத்திருக்கும் திருத்தம் மிகவும் நியாயமானது. அதிகாரி போட்டிருக்கக்கூடிய ஒரு உத்திரவைப் பார்த்தால் தெரியும். என் கையில் இருப்பது சர்க்காரே வெளியிட்டுள்ள சஜஷன்ஸ்.

' Suggestions for the amendment of the Act—The Central Government are contemplating All-India Legislation for shops and commercial establishments throughout the country. In case that legislation is enacted, there may be no need to amend the Madras Shops and Establishments Act. The Government have therefore deferred consideration of the suggestions of the Special Officer involving amendments to the Madras Shops and Establishment Act till the Government of India have come to definite decision on the question of Central Legislation (G,O. No. 4060, Development, dated 7th September 1953).'

இந்தக் காரணத்தைப்பார்த்தால் மிகவும் நியாயமாக இருக்கவேண்டுமென்று தெரியும். மத்திய சர்க்கார் ஷாப் ஆக்ட் சம்பந்தமாக ஒரு சட்டத்தை கொண்டுவருவதாக சொல்லப்படுகிறது. அந்த மாதிரியாக ஒரு சட்டம் கொண்டுவந்ததும் இந்தச் சட்டத்திற்கு அவசியம் இல்லை. அதனால்தான் சர்க்கார் ஸ்பெஷல் ஆபீசரின் யோசனைகளை மத்திய சர்க்காரிலிருந்து முடிவு தெரியும் வரைக்கும் இந்த சர்க்கார் ஒத்திப்போட்டிருக்கிறது என்று அந்த உத்திரவு கூறுகிறது. ஆதலால் நான் சொல்லுவது என்னவென்றால் மத்திய சர்க்கார் ஒரு சட்டம் இயற்றும்வரையில் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம். மேலும் நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் 1947-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் வரையறைக்குட்பட்டதாகத்தான் இருக்கிறது. அப்படியில்லை என்றால் இந்தத் திருத்தங்களை வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறேன்."

17th February 1955]

SRI M. PALANIYANDI :—" கனம் தலைவர் அவர்களே, ஸ்ரீ கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியிலிருந்து இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதால் அதை சர்க்கார் ஏற்றுக்கொள்வதா என்று கருதினால் அது ரொம்பவும் தவறான கருத்து என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த மாதிரியான ஒரு மசோதாவை சர்க்கார் கொண்டு வரவேண்டுமென்று எண்ணியிருக்கலாம். ஆனால் வேலைத் தொந்தரவால் முடியாது போயிருக்கலாம். இந்த ராஜ்யத்திலுள்ள எல்லாத் தொழிலாளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதால் அதையே அவர்கள் ஏற்றுக்கொள்வது ரொம்பவும் நன்றாக இருக்குமென்றே கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1-10 p.m.

" 1947-ம் வருஷத்தில் நம் ராஜ்யத்தின் முதன் முதலாக ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்டு சட்டம் கொண்டுவந்த காலத்தில் அதை எல்லாரும் பாராட்டினார்கள். அதைக் கொண்டுவந்த சர்க்காருக்கு தொழிலாளர்கள் தங்களது மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்கள். ஏனென்றால் அந்தமாதிரியான சட்டம் இந்தியாவிலுள்ள வேறு எந்த ராஜ்யத்திலும் கொண்டுவரப்படவில்லை. ஆகவே நாம் மிகப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தோம்.

" ஆனால் அந்த சட்டத்தின் விதிகளிலிருந்து சென்ற டிசம்பர் மாதத்தில் சிலபேர்களுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். இதனால் ஏற்பட்டுள்ள தீமை கொஞ்சநஞ்சமல்ல. ஏன் இப்படி விலக்கு அளித்தீர்கள் என்று சர்க்காரைக்கேட்டதற்கு சர்க்கார் அந்தச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில் சிறு கடைகளே அதிகம் பெருகவில்லையென்றும், சிறு கடைகள் அதிகம் பெருக வேண்டுமென்பதற்காகவே இந்த விதிவிலக்கு அவசியம் எனக் கருதப்பட்டதாகவும், விதிவிலக்கு அளிப்பதன் மூலம் சிறு கடைகளின் எண்ணிக்கை பெருகுகிறதா பார்ப்போம் என்பதற்காகப் பரீட்சார்த்தமாகவே ஒரு ஆண்டுக்கு இந்த விதிவிலக்கு அளித்திருப்பதாகவும் கனம் மந்திரி அவர்கள் பதில் சொன்னார். சிறு கடைக்காரர்களின் நலனில் சர்க்காருக்கு இருக்கின்ற அக்கரை எங்களுக்கும் இருக்கின்றது. ஆனால் அதற்காக தொழிலாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்படவேண்டுமென்று சொன்னால் அதை எங்களால் ஒத்துக்கொள்ள முடியாது. இந்த விதிவிலக்கு அளித்திருப்பதன் காரணமாக ஒரு கடையில் வேலை செய்கின்ற சிப்பந்தி இன்றையதினம் நாள் பூராவும் வேலை வாங்கப்படுகிறான், அதோடு அநியாயமாக வேலையைவிட்டு நீக்கப்பட்டால் அவனுக்குப் பாதுகாப்பு எதுவும் கிடையாது. இது நியாயமா என்று சர்க்காரைக்கேட்க விரும்புகிறேன். அதோடு நான்கு பேர், ஐந்து பேர்கள் வேலை செய்து கொண்டிருந்த கடைகளிலெல்லாம் மூன்று பேர், இரண்டு பேராகக் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் வேலை இழந்தவர்கள் எத்தனை பேர் ? எதற்காக இந்த விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்கிறேன்.

" என்னுடைய சொந்த அனுபவத்தில் சொல்லுகிறேன். ஒரு கடைக்கார முதலாளி நாள் பூராவும் கடையில் உட்கார்ந்துகொண்டு பணம் சம்பாதிக்க விரும்புவானே தவிர, ஒரு நாள், ஒரு மணி நேரம் ஏதாவது பொது விழாக்களில் கலந்து கொள்வானா ? மாட்டவே மாட்டான். ஊரில் விடுதலை நாள் கொண்டாடப்பட்டால் என்ன ? சுதந்திர தினம் கொண்டாடப்பட்டால் என்ன ? அவனுக்குக் குறி பணம் தான். இப்படி இருக்கக்கூடிய அவனது பேராசைக்கு தொழிலாளர்களையா பலியிடுவது என்று கேட்கிறேன். வாரத்திற்கு ஒரு நாள் கடை அடைக்கப்படவேண்டுமென்றால் தொழிலாளர்கள் மாத்திரம் அனுகூலம் பெறவில்லை. முதலாளிகளும்கூட ஒரு நாள் வீட்டில் கண்டிப்பாக உட்கார்ந்து ஓய்வு எடுத்துக்கொண்டாகவேண்டுமென்ற நிலைமை வருவதால் அவர்களுக்கும் அனுகூலம். பொதுமக்கள் கஷ்டப்படுவார்களே என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குத் தெரியும், என்றைக்கு வார விடுமுறை என்று. ஆகவே அதற்கு முந்திய தினமே மறு நாளைக்கு என்ன சாமான் வேண்டுமென்று

பார்த்து வாங்கி வைத்துக்கொண்டுவிடுவார்கள். ஆகவே அவர்களும் கஷ்டப்படவேண்டியதாக இருக்காது. இதையெல்லாம் கருதியேதான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதோடு இன்றையதினம் ஷாப் ஆக்ட் லாரி டிரைவர்கள், க்ளீனர்கள் ஆகியோருக்கு உதவுவதாகவில்லை. டிரைவர்களிடம் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற மணி நேரத்திற்கு அதிகமாகவே வேலை வாங்கப்பட்டு வருகிறது. ஆகவே அவர்களையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவந்து, அவர்களும் இச்சட்டப்படி அனுகூலம் பெறவேண்டுமென்பதற்காக இந்த திருத்த மசோதாவில் ஒரு ஷரத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டாகவேண்டும். மூன்று பேர்கள் இருந்தாலும், அவற்றுக்குக் குறைவாகவோ, அதிகமாகவே தொழிலாளர்கள் இருந்தாலும் இந்த ஷாப் சட்டம் எல்லா இடங்களுக்கும் செல்லும் என்கின்ற முறையில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது ; இதனால் இந்த ராஜ்யத்திலுள்ள தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும். சென்ற வாரம்கூட ஒரு கடைக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள தொழிலாளர்கள் அதைத்தான் வரவேற்கிறார்கள். ஆகவே இதை சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.''

* **SRI P. VENKATESHA SHOLAGAR** :—" கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சி உபதலைவர் கொண்டுவந்துள்ள ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்டு திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

" இன்றைய தினம் சர்க்கார் அனுஷ்டிக்கின்ற கொள்கையைப் பார்த்தால் ராஜ்யத்திலுள்ள கடை சிப்பந்திகளின் நிலைமை என்ன ஆகுமோ என்று கவலைப்படவேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் 1944-45-ம் வருஷங்களிலெல்லாம் கடை முதலாளிகள் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு வந்தார்களே தவிர அவர்கள் கடையில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு எந்தவிதமான சலுகையும் அளிக்கவில்லை. நினைத்தபோது வீட்டுக்குப் போகச் சொல்வது, நாள் பூராவும் வேலை வாங்குவது, வாரத்திற்கு ஒரு நாள்கூட லீவு இல்லாமல் வாரம் பூராவும் வேலை வாங்குவது, ஆகிய கொடுமைகளால் கடை சிப்பந்திகள் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அதன் காரணமாக பெரிய கிளர்ச்சி நடந்து 1947-ம் வருஷத்தில் கடை சிப்பந்திகளின் கஷ்டம் ஒரளவு குறையும் வகையில் ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டு வந்தார்கள். அதனால் உண்மையிலேயே பல கடை சிப்பந்திகள் வாரத்திற்கு ஒரு நாள் லீவு வசதியைப் பெற்றார்கள். அநியாயமாக வேலையைவிட்டு நீக்கினால் அதன்பேரில் லேபர் டிரிப்யூனலுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும் உரிமையைப் பெற்றார்கள். அவ்வளவுதான். லேபர் டிரிப்யூனல் கொடுக்கும் தீர்ப்பை முதலாளிகள் ஏற்க மறுத்தால் அவர்களை ஏற்கும்படி கட்டுப்படுத்த சட்டத்தில் வசதியில்லை. அதையெல்லாம் திருத்தி இன்னும் பல நன்மைகளை சர்க்கார் செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது இன்றைய தினம் சர்க்கார் மூன்று, அல்லது மூன்றுக்குக் குறைவாக தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கும் கடைகளுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று விலக்கு அளித்துவிட்டார்கள். இதனால் ஏற்படுகின்ற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. கொசு தலையில் புளவை புறப்பட்டால் அறுக்கவும் முடியாது, தீய்க்கவும் முடியாது என்கின்றதைப்போல இந்தச் சிறிய உரிமைக்கும் விதிவிலக்கு அளித்திருப்பதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இந்த விதிவிலக்கினால் மூன்று பேர்களுக்குமேல் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் உள்ள ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தர்கள் தங்களிடம் வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையை மூன்று பேராகவும், அதற்குக் குறைவாகவும் குறைத்துக்கொள்ளுகிறார்கள். நாலு பேர்கள் வேலைக்கு வைத்துக்கொண்டு மூன்று பேர்தான் என்று சொல்லும் கடைகளில் அதிகாரி கேஸ் பிடித்தாலும் அவருக்கு உள்ள நிர்ப்பந்தத்தால் தொழிலாளியே நான் கடையில் வேலை செய்யவில்லை சாமான் வாங்கவந்தேன் என்று கூறக்கூடிய நிலைமையில் உள்ளது. ஆகவே மூன்று பேர்கள் இருந்தாலும் குறைவாக இருந்தாலும் எல்லா இடங்களுக்கும் இந்த சட்டம் செல்லும் என்று பண்ணவேண்டியது ரொம்பவும் முக்கியமாகும். அந்த முறையில்

17th February 1955] [Sri P. Venkatesha Sholagar]

இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருப்பதால் இதை நான் ஆதரிப்பதோடு சர்க்காரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Mr. Speaker, 1-20 p.m.
Sir, if I am not able to accept this motion, it is not because I hold that no amendments to this Act are necessary. As has been pointed out, the Special Officer appointed by the Government to go into the question of the working of this Act, has himself made certain suggestions which can be implemented only by amending the Act. But this Government have been looking forward to the Central Government taking up this matter for their own legislation. Hon. Members would appreciate the advantage of having a central legislation for this purpose. The Government of India have been telling us that they propose to introduce a central legislation governing this and therefore this Government did not take up the question of amending this Act. I may tell the hon. Deputy Leader of the Opposition that Government of India have further recently intimated to this Government that their draft Bill for this legislation had almost been finalized and that it would be taken up soon. Therefore, this Government do expect the Government of India to come forward with their legislation as proposed by them, perhaps after the ensuing Budget Session of the Parliament. Anyhow, I may tell hon. Members here that I shall pursue this matter and if by any chance the Government of India are not likely to proceed with the legislation as has been proposed by them, then this Government will take up the question of introducing amendments which this Government consider necessary to this Act.

" Sir, I do not propose to go into the merits of the various provisions of the draft Bill which has been introduced by the hon. Deputy Leader of the Opposition. But, since this Government do expect the Government of India to come forward with legislation and since as I have said if that is not to be pursued, this Government do propose to consider what amendments could be made to this Act, I would put it to the hon. Deputy Leader of the Opposition not to press this motion. But in case this is pressed, Government will have no other alternative but to oppose this motion."

* SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தங்களில் சில முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. மூன்று தொழிலாளர்கள் இருக்கக்கூடிய கடைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்திருப்பதால்தான் இந்தத் திருத்தத்தை கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. கொடுக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. மத்திய சர்க்கார் கொண்டு வரக்கூடிய சட்டம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது இப்பொழுது நமக்குத் தெரியாது. அப்படிப்பட்ட சட்டம் மத்திய சர்க்காரால் சீக்கிரத்தில் கொண்டுவரப்படலாம் என்ற நம்பிக்கை இருந்தாலும் அந்தச் சட்டம் வரும் வரையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது. அந்தச் சட்டம் வந்தவுடன் இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டுவிடலாம். அதுவரையிலாவது இந்த திருத்தச்சட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது? எந்த ஆட்சேபணையும்

இருக்க இடமில்லை. அதனால் நான் கொடுத்த இந்த திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது இதை ஒரு செலெக்ட் கமிட்டிக்கு விட்டு அங்கு இதை ஆலோசனை செய்யவேண்டும் என்றும், பட்ஜெட் முடிந்தவுடன் இதை எடுத்துக்கொள்ளலாம் என்ற யோசனையையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.''

*THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' கனம் சபா நாயகர் அவர்களே, எதிர்க்கட்சியினர் நல்லெண்ணத்துடன் கொண்டு வந்த இந்த திருத்தத்தை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளக்கூடாதா, ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். எந்த வகையில் இந்த சட்டத்தைத் திருத்தி சட்டம் செய்யலாம் என்று இந்த சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கமே மசோதா கொண்டுவருவதாக இருந்தாலும் அதைக்கொண்டுவரலாம். ஆனால் மத்திய சர்க்கார் ஒரு சட்டத்தைக் கொண்டுவரப்போவதால் இப்பொழுது இந்த சர்க்கார் அப்படிப்பட்ட ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவராமல் இருக்கிறார்கள். ஸ்பெஷல் ஆபீசரின் சிபாரிசுகள் பேரில் திருத்தச்சட்டம் கொண்டுவந்து இப்பொழுதுள்ள குறைகளை நீக்க முடியும். ஆனால் மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போவதால் நாமும் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டாம். ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கவேண்டாம் என்பதற்காகத்தான் இப்பொழுது இந்த சர்க்கார் அப்படிப்பட்ட ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. மத்திய சர்க்காருடைய சட்டத்திற்கும் இந்த சர்க்காருடைய சட்டத்திற்கும் எந்த விதமான வித்தியாசமும் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த சர்க்கார் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வராமலிருக்கிறார்கள். இப்பொழுது கொண்டுவந்தும் பிரயோசனமில்லை. மத்திய சர்க்கார் கொண்டுவந்த பிறகு குறைபாடுகளை நீக்குவதற்கு எப்படி திருத்தம் கொண்டுவரலாம் என்று யோசிப்போம். மத்திய சர்க்காரும் அதைச் சீக்கிரத்தில் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறோம். அதனால்தான் இந்த சர்க்கார் இப்பொழுது கொண்டுவரவில்லை. எதிர்க்கட்சி கொண்டுவந்தாலும் அதையும் ஒத்துக்கொள்வதற்கு இல்லை. இதனால்தான் இந்த மசோதாவை சர்க்கார் எதிர்க்கிறது.''

MR. SPEAKER :—'' The question is—

'That the Madras Shops and Establishments (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 15 of 1954), be taken into consideration at once.' ''

The motion was put and lost.

MR. SPEAKER :—'' There are only five more minutes. We can now adjourn. The House will now rise for lunch and meet again at 2-30 p.m.''

The House then adjourned for lunch.

(After lunch—2-30 p.m.)

(3) THE DISTRIBUTION OF WASTE LAND BILL, 1954 (L.A. BILL NO. 34 OF 1954).

SRI C. KANDASAMY :—'' Mr. Speaker, Sir, I move—

'*That Sri C. Kandasamy having been authorized by the Member-in-charge of the Distribution of Waste Land Bill,* 1954, *introduced on the* 12*th August* 1954 *by Sri P. Ramamurthi who is unable to be present in the House, be permitted to carry the Bill through its further stages.*' ''